# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**<u>ஆணை நாள் – 02.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.CP.5841/F/2024</u>**

திரு V. ஜெயபிரகாஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் - 606 701. .. பொது அதிகார அமைப்பு

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 22.10.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 04.12.2024 |

****

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு V. ஜெயபிரகாஷ் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு S. ராயர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) (பொறுப்பு), வட்டார வளப்ர்ச்சி அலுவலகம், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், திருவண்ணாமலை மாவட்ட, செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சின்னகோளாபாடி கிராமத்தில் வறுமை கோட்டிற்குக்கீழ் எத்தனை நபர்கள் உள்ளனர் என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சின்னகோளாபாடி கிராமத்தில் வறுமை கோட்டிற்குக்கீழ் எத்தனை நபர்கள் உள்ளனர் என்பது பற்றிய விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், நாளதுவரையிலும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான ந.க.எண்.403/2025/அ4 நாள் 27.03.2025 தேதியிட்ட ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார்.

*6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களில் 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

*7. மேற்படி, மனுதாரரின் **22.10.2024** தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை உரிய காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்காத காரணத்தினால், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு து. நக்கீரன் என்பவரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்குமாறு திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு து. நக்கீரன் என்பவருக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.5841/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் - 606 701.

**<u>வழக்கு எண்.CP.5841/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு V. ஜெயபிரகாஷ், த/பெ. வட்டன்,
எண்.124, மேட்டுத்தெரு,
சின்ன கோளாபாடி (கிராமம்),
பெரிய கோளாபாடி அஞ்சல்,
செங்கம் வட்டம் - 606 704,
திருவண்ணாமலை மாவட்டம்.

Copy to: File
SNPS / 04.04.2025